# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 30.03.2022 புதன் கிழமை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திருமதி.பா.கவிதா,எம்.காம்.,**
**தலைவர்,**
**திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்**

<table>
<tr><th rowspan="2">பொருள் எண்</th><th rowspan="2">பொருள்கள் விபரம்</th><th colspan="2">நகர்மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><th>தீர்மானம் எண்</th><th>விபரம்</th></tr>
<tr><td></td><td>

**தமிழக அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்க நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:**

மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களது தலைமையிலான அரசு அமைந்தபின் கீழ்க்கண்டுள்ள திட்டப்பணிகள் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

<table>
<tr><th>வ.எண்.</th><th>திட்டப் பணிகளின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>(I)</td><td colspan="2">கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22</td></tr>
<tr><td>1.</td><td>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 19 எண்ணிக்கை மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக அமைக்கும் பணி</td><td>161.25</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண் 1 ஜே.கே.ஆர். கார்டன் பகுதியில் புதிய பூங்கா அமைக்கும் பணி</td><td>40.00</td></tr>
</table>

</td><td>01</td><td>நிறைவேற்றப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 3. | வார்டு எண் 5 புதிய பேருந்து நிலையம் அருகில் காய்கறி மார்க்கெட் வளாகம் அமைக்கும் பணி | 295.40 |
| 4. | வார்டு எண் 10 மேட்டுத் தெருவிலுள்ள திருக்குளத்தினை மேம்பாடு செய்யும் பணி | 149.00 |
| 5. | வார்டு எண் 2 வெட்டுக்குளத்தினை மேம்பாடு செய்யும் பணி | 150.97 |
| | **கூடுதல்** | **796.62** |
| **(II)** | **நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் 2021-22** | |
| 1. | தமிழ்நாடு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற ஏழைகளுக்கு வாழ்வாதாரம் ஏற்படும் பணிகள் | 150.00 |
| **(III)** | **இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைநிரப்பு நிதி 2021-22** | |
| 1. | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடை நிரப்பு நிதி 2021-22 திட்டத்தின்கீழ் அபிஷேககட்டளை மற்றும் பெரியநாயகிபுரம் பகுதிகளிலுள்ள உள்ள சமுதாய கழிப்பறைகளை மேம்படுத்தும் பணி | 10.00 |
| **(IV)** | **மூலதன மான்ய நிதி 2021-22 திட்டம்** | |
| 1. | மூலதன மான்ய நிதி 2021-22 திட்டத்தின்கீழ் திருவாரூர் சாலை மற்றும் காந்தி முதலியார் நகரில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 20.50 |
| | **ஆக கூடுதல்** | **977.12** |

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு ரூ.977.12 இலட்சத்திற்கான திட்டப் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகர்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்நகர்மன்றம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

மேலும், திருத்துறைப்பூண்டி நகராட்சிப் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியை தவிர்க்கும் வகையில் புதிய புறவழிச்சாலை அமைக்க வேண்டும் என்ற பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, புறவழிச்சாலை அமைக்க நிதி

<table>
<tr><td></td><td>ஒதுக்கீடு செய்து உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இக்கோரிக்கை நிறைவேற்றுவதற்கு சட்டமன்றத்தில் கோரிக்கை விடுத்து நிறைவேற்றிய திருத்துறைப்பூண்டி தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.மாரிமுத்து அவர்களுக்கும் இந்நகர்மன்றம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.</td><td></td><td></td></tr>
<tr><td>01</td><td>நகராட்சி ஆணையர் அவர்களின் மார்ச்-2022 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு பதிவு செய்யலாம்.</td><td>02</td><td>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>02</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் த.நா.50எல்-7339 டிப்பர் லாரியில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் பொதுசுகாதாரப் பிரிவு பயன்பாட்டிற்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் 24.02.2022-ல் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. உத்தேச செலவினம் ரூ.2.25லட்சத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>தர்மராஜ் ஆட்டோ கேரேஜ்,<br>34/59.தஞ்சாவூர்ரோடு, திருவாரூர்</td><td>198800/-</td></tr>
<tr><td>2.</td><td>அன்னை சத்யா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,<br>13. ராம்கே ரோடு, செங்கம் தியேட்டர், திருவாரூர்</td><td>200650/-</td></tr>
<tr><td>3.</td><td>குரு ஆட்டோ கேரேஜ்,<br>1. நாகை ரோடு, திருவாரூர்</td><td>206450/-</td></tr>
<tr><td>4.</td><td>தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ்,<br>1ஏ/12. பை பாஸ் ரோடு,<br>விஜயபுரம், திருவாரூர்</td><td>187161/-</td></tr>
</table></td><td>03</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>மேற்கண்டுள்ள விலைப்புள்ளிகள் ஒப்புநோக்குப் பட்டியல்படி குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 4-ல் உள்ள தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் திருவாரூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று நகராட்சியின் பொதுசுகாதார பராமரிப்பிற்கு வாகனத்தினை சீர் செய்து பயன்படுத்திட மன்றம் ஏற்கலாம்.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br><u>ந.க.எண்:2684/2021/எச்1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>03</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் த.நா.50எல்-7339 டிப்பர் லாரி வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்து தருவதற்கு அரசு அங்கீகாரம் பெற்றுள்ள ஆட்டோ ஒர்க்ஸ் நிறுவனத்திடமிருந்து 24.02.2022-அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள நான்கு விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th rowspan="2">வ. எண்.</th><th rowspan="2">பணியின் விவரம்</th><th>தர்மராஜ் ஆட்டோ கேரேஜ், திருவாரூர்</th><th>அன்னை சத்யா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருவாரூர்</th><th>குரு ஆட்டோ கேரேஜ், திருவாரூர்</th><th>தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ், திருவாரூர்</th></tr>
<tr><th colspan="4">(ரூபாயில்)</th></tr>
<tr><td>1</td><td>ஆயில் சர்வீஸ் செய்தல்</td><td>6500</td><td>6850</td><td>7200</td><td>6400</td></tr>
<tr><td>2</td><td>கேபில் பெட்டி டிங்கரிங் தொட்டி முழுமையாக பார்க்க வேண்டும்</td><td>48000</td><td>52000</td><td>56000</td><td>35500</td></tr>
<tr><td>3</td><td>அனைத்து எண்டுகளிலும் புதிதாக செய்த தர வேண்டும்</td><td>22000</td><td>23000</td><td>25000</td><td>10500</td></tr>
<tr><td>4</td><td>ஒயரிங் சரி செய்ய வேண்டும்</td><td>6000</td><td>6000</td><td>6400</td><td>6700</td></tr>
<tr><td>5</td><td>செல்ப் மோட்டார் சரி செய்ய வேண்டும்</td><td>8500</td><td>8500</td><td>9300</td><td>10700</td></tr>
</table>
</td>
<td>04</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | டைனமோ சரி செய்ய வேண்டும் | 6000 | 6700 | 7000 | 10000 |
| 7 | முழுமையாக பெயிண்டிங் செய்து தர வேண்டும் | 16500 | 19000 | 20000 | 12650 |
| 8 | ஜாக்கி சரி செய்து தர வேண்டும் | 18500 | 19000 | 20500 | 16000 |
| 9 | ஏர் டியூப் மாற்ற வேண்டும். | 2800 | 3100 | 2600 | 15000 |
| 10 | Joint Crass 3 இணைப்பு சரி செய்ய வேண்டும் | 17000 | 20200 | 20500 | 11000 |
| 11 | கிளர்ச் வேலை முழுமை யாக முடிக்க வேண்டும் | 18700 | 17300 | 18000 | 17000 |
| 12 | பிரேக் மாற்றி சரி செய்து ஆயில் சீல் பேக்கிங் செய்தல் | 22300 | 20500 | 25350 | 20000 |
| 13 | தகுதி சான்று (எப்.சி.) ஸ்டிக்கர் சான்று எடுத்து தருதல் | 6000 | 6500 | 6800 | 0 |
| | **கூடுதல்** | **198800** | **200650** | **206450** | **187161** |

அலுவலக குறிப்பு:

1) மேற்படி வரப்பெற்று நான்கு விலைப்புள்ளிகளில் வரிசை எண் 4-ல் கண்டுள்ள தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் விஜயபுரம் திருவாரூர் அளித்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.
2) மேற்படி வாகனம் பொதுசுகாதாரப் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு வாகனத்திற்கும் தகுதி சான்று உடன் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி அவசர அவசியம் கருதி ஆணையர்/ தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் விஜயபுரம் திருவாரூர் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:2684/2021/எச்1**

<table>
<tr>
<td>04</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொது நிதி 2021-2022ன்கீழ் வார்டு எண் 5 செங்கமலத் தெருவில் சிறுபாலம் பழுது நீக்கும் பணி ரூ.1.00இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 03.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>எஸ்.பாலசுப்பிரமணியன்</td><td rowspan="2">80216/-</td><td>80074/-</td><td>0.18 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>எஸ். பானுமதி</td><td>78952/-</td><td>1.58 சதவீதம் குறைவு</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 1.58 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.பானுமதி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><br>
<u>ந.க.எண்:445/2022/இ1</u>
</td>
<td>05</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>05</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொது நிதி 2021-2022ன்கீழ் வார்டு எண் 14 சண்முகம் செட்டித் தெருவில் மழைநீர் வடிகால் பழுது நீக்கும் பணி ரூ.1.00இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 03.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.</td>
<td>06</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>எஸ்.பாலசுப்பிரமணியன்</td><td rowspan="2">108444/-</td><td>108503/-</td><td>0.05 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>எஸ். பானுமதி</td><td>108347/-</td><td>0.09 சதவீதம் குறைவு</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.09 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.பானுமதி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><br>
<u>ந.க.எண்:445/2022/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>06</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொது நிதி 2021-2022ன்கீழ் வார்டு எண் 3 குட்ஷெட் தெருவில் சிறுபாலம் பழுது நீக்கும் பணி ரூ.3.30இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 03.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>எஸ்.பாலசுப்பிரமணியன்</td><td rowspan="2">288292/-</td><td>287777/-</td><td>0.18 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>எஸ். பானுமதி</td><td>286465/-</td><td>0.63 சதவீதம் குறைவு</td></tr>
</table>
</td>
<td>07</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு: வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.63 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.பானுமதி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><br>**ந.க.எண்:445/2022/இ1** | | |
| **07** | இந்நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை மத்திய அரசின் MOUD துறையினர் Star Rating ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றார்கள்.<br>திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகின்றது. மேலும், இரண்டாம் நிலை சேகரம் செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.<br>திருத்துறைப்பூண்டி நகராட்சி குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) 3 நட்சத்திர அங்கீகாரம் பெற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு (Self Declaration) மற்றும் அனுமதித்துள்ளது. பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்கள் பெறுவதற்கு திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செய்தி மக்கள் தொடர்புதுறை அலுவலர் அவர்களுக்கு 28.02.2022-ல் கடிதம் அனுப்பப்பட்டு தினதந்தி நாளிதழில் 03.03.2022ல் வரப்பட்ட செய்திக்கு ரூ.14742/- (ரூபாய் பதினான்காயிரத்து எழுநூற்றி நாற்பத்திரண்டு மட்டும்) தினத்தந்தி நாளிதழுக்கு வழங்கிட மன்றப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். பொதுசுகாதாரப் பிரிவிற்கு திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக துறையின் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:127/2020/எச்1** | **08** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| **08** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கும், இரவில் தங்கும் பேருந்துகளுக்கும் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு அர்சாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008 – ன்படி கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 30 அழைப்புகளுக்கு மேலாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில் மேற்படி நிகழ்வில் கலந்துக் கொள்ள எவரும் முன் வரவில்லை. ஆகவே மேற்கண்ட இனத்திற்கும், ஏலம் போகாத மற்றொரு இனமான புதிய பேரூந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கும் **2022-23 முதல் 2024-25 வரை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு** பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், இந்நிகழ்விற்கும் ஆகும் உத்தேச செலவினத் **தொகை ரூ.50000/-** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1) மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2) பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் இனத்திற்கு வைப்புத் தொகையாக ரூ.200000/- சொத்து மதிப்பு சான்று மதிப்பு ரூ.500000/- சொத்து மதிப்பு தாக்கல் செய்யாதவர்களுக்கு கூடுதல் பொறுப்புத் தொகை ரூ.300000/- என நிர்ணயம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஆனால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை கூடுதலாக உள்ளதென அந்நிகழ்வில் கலந்துக்கொள்ள எவரும் முன்வரவில்லை. அதன் பிறகு வைப்புத் தொகை ரூ.200000/- லிருந்து 150000/-மாக குறைத்து ஏலம் கோரப்பட்டும் ஏலம்கோர எவரும் முன்வரவில்லை. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மேற்கண்ட தொகைகளை குறைப்பதற்கு | **09** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br><br>**திருத்துறைப்பூண்டி நகராட்சி புதிய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கான வைப்புத் தொகையினை ரூ.1.50இலட்சத்திலிருந்து ரூ.1.00இலட்சமாக குறைத்திடவும், சொத்து மதிப்பு சான்று ரூ.5,00,000/-லிருந்து ரூ.3,00,000/-மாக குறைத்து வழங்கிடவும். சொத்து மதிப்பு சான்று தாக்கல் செய்ய இயலாத பட்சத்தில் ரூ.3,00,000/-லிருந்து குறைத்து ரூ.1,50,000/-க்கு பெற்றிடவும் மன்றம் அனுமதித்து தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.** |

<table>
<tr>
<td></td>
<td>மன்றம் முடிவு செய்யாலாம்.<br><br>3) புதிய பேருந்து நிலையம் ”சி” கிரேடு நிலை என்பதாலும், கொரோனா வைரஸ் பெருந்தொற்று காலங்களான சூழலில் பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேரூந்துகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. தற்பொழுது வந்து செல்லும் பேரூந்துகளின் எண்ணிக்கை அடிப்படையில் குத்தகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>ந.க.எண்.615/2022/அ2</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>09</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் 2021-22 கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வார்டு எண் 1 மன்னை சாலையிலுள்ள வெட்டுக்குளத்தினை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.150.97இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களால் 1/2022/டி1 நாள் 18.02.2022ன்படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு மேற்படி பணிக்கு 08.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>எஸ்.மாரியம்மாள்</td><td rowspan="2">150.97</td><td>14317185.71</td><td>9.10 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>மெஸ்ஸர்ஸ்.மங்கையர் கரசி கன்ஸ்ட்ரக்ஷன்</td><td>1600324.010</td><td>21.95 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
</td>
<td>10</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதல் சதவிகிதத்திற்கு வரப்பெற்றுள்ளதால், இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி.எஸ்.மாரியம்மாள் ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி விலையை குறைத்து சம்மதக்கடிதம் வழங்க கேட்டுக்கொண்டுள்ளதன்பேரில் 11.03.2022 அன்று கீழ்க்கண்டவாறு விலைக் குறைப்பு செய்து சம்மதக்கடிதம் வழங்கியுள்ளதன்பேரில், ஒப்பு நோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ. | சதவீதம் குறைவு/ அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | எஸ்.மாரியம்மாள் | 150.97 | 13686721.19 | 4.30 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. திருமதி.எஸ்.மாரியம்மாள் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று (Letter of Acceptance) ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் வழங்கியதையும், தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக் கலாம்.

**ந.க.எண்:1583/2021/இ1**

<table>
<tr>
<td>10</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் 2021-22 கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வார்டு எண் 10 மேட்டுத் தெருவிலுள்ள திருக்குளத்தினை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.149.00இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களால் 1/2022/டி1 நாள் 18.02.2022ன்படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு மேற்படி பணிக்கு 08.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>பி.கண்ணன்</td><td rowspan="2">149.00</td><td>13969668.87</td><td>7.19 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>மெஸ்ஸர்ஸ்.மங்கையர் கரசி கன்ஸ்ட்ரக்ஷன்</td><td>15925914.65</td><td>22.20 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதல் சதவிகிதத்திற்கு வரப்பெற்றுள்ளதால், இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. பி.கண்ணன் ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி விலையை குறைத்து சம்மதக்கடிதம் வழங்க கேட்டுக்கொண்டுள்ளதன்பேரில் 11.03.2022 அன்று கீழ்க்கண்டவாறு விலைக் குறைப்பு செய்து சம்மதக்கடிதம் வழங்கியுள்ளதன்பேரில், ஒப்பு நோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.</td>
<td>11</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>பி.கண்ணன்</td><td>149.00</td><td>13561682.71</td><td>4.06 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:
<ol>
<li>திரு. பி.கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று (Letter of Acceptance) ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் வழங்கியதையும், தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக் கலாம்.</li>
</ol>
<u>ந.க.எண்:1583/2021/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>11</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் 2021-22 கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண் 15 ந.நி. (ம) கு.வ. துறை நாள் 20.01.2022ன்படி வார்டு எண் 5 புதிய பேருந்து நிலையம் அருகில் தினசரி காய்கறி மார்க்கெட் புதிதாக அமைக்கும் பணிக்கு ரூ.295.40இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களால் 1/2022/டி1 நாள் 17.02.2022ன்படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு மேற்படி பணிக்கு 08.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.</td>
<td>12</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ. | சதவீதம் குறைவு/ அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | எஸ். மாரியம்மாள் | 295.40 | 26828412.50 | 10.58 சதவீதம் அதிகம் |
| 2. | மெஸ்ஸர்ஸ்.மங்கையர் கரசி கன்ஸ்ட்ரக்ஷன் | | 25787126.00 | 6.29 சதவீதம் அதிகம் |

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதல் சதவிகிதத்திற்கு வரப்பெற்றுள்ளதால், இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெஸ்ஸர்ஸ்.மங்கையர்கரசி கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி விலையை குறைத்து சம்மதக்கடிதம் வழங்க கேட்டுக் கொண்டுள்ளதன்பேரில் 11.03.2022 அன்று கீழ்க்கண்டவாறு விலைக் குறைப்பு செய்து சம்மதக்கடிதம் வழங்கியுள்ளதன்பேரில், ஒப்பு நோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ. | சதவீதம் குறைவு/ அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெஸ்ஸர்ஸ்.மங்கையர் கரசி கன்ஸ்ட்ரக்ஷன் | 149.00 | 25447639/- | 4.89 சதவீதம் அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு:<br>1. மெஸ்ஸர்ஸ்.மங்கையர்கரசி கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று (Letter of Acceptance) ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் வழங்கியதையும், தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:1784/2021/இ1** | | |
| **12** | திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி களிலுள்ள 10 எண்ணிக்கையிலான பொதுக் கழிப்பிடங்களை பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், இந்நகராட்சி அலுவலகத்திலுள்ள கழிப்பிடங்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.10.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 1784 /2021/இ1** | **13** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **13** | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படிஇந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள உபயோகமற்ற இரும்பு கழிவுகள் மற்றும் பழுதடைந்த பழைய பொருட்களை பொது ஏலத்தில் விடுவதற்கும், தொடர் நடவடிக்கை மேட்றகொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 1583 /2021/இ1** | **14** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>14</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் 2021-2022 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளின் வவரம் தினகரன் தொழில் மலர் – 2021ல் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் KAL PUBLICATIONS (P) LTD நிறுவனத்திடமிருந்து ரூ.70,000/=க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்டுள்ள தொகையினை KAL PUBLICATIONS (P) LTD திருச்சி, நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br><u>ந.க.எண்: 1788/2020/இ1</u></td>
<td>15</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>15</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளிலும் 1294 தெருவிளக்குகள் உள்ளன. தற்பொழுது தெருவிளக்குகள் இல்லாத பகுதிகளில் புதிதாக எல்.இ.டி. மின் விளக்குகள் அமைத்திட அரசிடமிருந்து நிதி வேண்டி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை எதிர்நோக்கி கீழ்க்காணும் விபரப்படி புதிய மின் விளக்குகள் அமைக்கும் பணியினை ரூ.10.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>எல்.இ.டி. தெருவிளக்குகள் விபரம்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1.</td><td>20 வாட்ஸ்</td><td>170</td></tr>
<tr><td>2.</td><td>60 வாட்ஸ்</td><td>15</td></tr>
<tr><td>3.</td><td>90 வாட்ஸ்</td><td>15</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>200</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br><u>ந.க.எண்: 1963/2020/இ1</u></td>
<td>16</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **16** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பயன்பாட்டி உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மின் பவர் பம்புகள் ஆகியவற்றை பராமரிப்பு செய்யவும், கைப்பம்பு ஆழ்துளை கிணறு அமைத்தல், மின்மோட்டார் அறைகளில் மின் பழுதுகள், பைப்லைன் பழுதுகள் சரிசெய்வதற்கும், கைப்பம்புகள் பராமரித்தல், குடிநீர் விநியோக குழாய்கள் பராமரிக்கவும் 2022-2023 ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.9.80 இலட்சத்திற்கும், இப்பணிகளை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண்: 801/2022/இ1** | **17** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/ பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/